தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25-7-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ஆப்பிரிக்க விஞ்ஞானிகள் குழு வருகை

மளாவி, லிலாங்குவி வேளாண் மற்றும் இயற்கைவள பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆறு விஞ்ஞானிகளைக் கொண்ட குழு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக கழகத்திற்கு ஜீலை 24-25, 2014 அன்று வருகை புரிந்தனர். பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ள வேளாண் விரிவாக்க அணுகுமுறைகள் மற்றும் புதுமையான விவசாய தொழில்நுட்பங்களை அறிந்து, அப்புதுமைகளை மளாவி நாட்டில் பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்துதலே அவர்களின் நோக்கமாகும். அவர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இ-விரிவாக்க மையம், கிசான் கால் சென்டர், வேளாண் தொழில்நுட்ப தகவல் மையம், சமுதாய வாொனலி நிலையம், கல்வி ஊடக மையம், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தாவர உயிரியல் மூலக்கூறு துறையின் திசு வளர்ப்பு ஆய்வகம் மற்றும் பசுமைக்குடில், விரிவாக்கக் கல்வி இயக்குனரகம் மற்றும் ஆராய்ச்சி இயக்குனரகத்தையும் பார்வையிட்டனர். இந்த பார்வையிடலின் மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடினார்கள். ஒரு ஆப்பிரிக்க வல்லுநர் திரு. தியாமோன் மளாவியின் வேளாண்மை குறித்து சமுதாய வானொலியில் விவசாய பண்பலையில் 107.4 மெஹாஹெர்ட்ஸில் ஒரு கருத்துரை வழங்கினார். மேலும் இதை தமிழ்நாடு வேளாண்மை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. ஆப்பிரிக்க வல்லுநர் குழு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கடைபிடிக்கும் வேளாண் விரிவாக்க முறைகளான இ-வேளாண்மை, வேளாண் தொழில்நுட்ப வலைதளம், வல்லுநர் அமைப்பு, வேளாண் அறிவியல் நிலையம் போன்றவற்றை வெகுவாக பாராட்டினார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கடைபிடிக்கும் பல்வேறு விரிவாக்க முறைகளான வேளாண் அறிவியல் நிலையம், வீடியோ மூலம் கல்வி பயிலும் முறை மற்றும் வேளாண் தொழில்நுட்ப வலைதளம் போன்றவை வரவேற்கத்தக்கது. இதனை அவர்கள் நாட்டிலும் கடைபிடிக்க திருமதி. ட்ரஸ்ட் விருப்பம் தெரிவித்தார்.

ஆப்பிரிக்க வல்லுநர் குழுவை விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் சார்பில் முனைவர். ச. கார்த்திகேயன், பேராசிரியர், இ-விரிவாக்க மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் பல்வேறு துறைகளை பார்வையிட ஒருங்கிணைத்து வழிநடத்தினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்











